

(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 209.]

பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

2026 நவம்பர் 27, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2179/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள சிவில் பாதுகாப்புப் படையினரின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களின் நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனவா;

(iii) குறித்த படையினர் சேவையில் ஈடுபட்டுள்ள முகாம்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்படையினர் தற்காலிக சேவை நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், இவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏதேனும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) குறித்த படையினருக்கு குறிப்பான சேவை நிலையங்களை வழங்குவதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(iv) சிவில் பாதுகாப்புப் படையினருக்கு இடமாற்றங்களை வழங்கும் போது பின்பற்றப்படும் வழிமுறை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

2209/2026

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு முகவர் நிலையத்தினதும் பெயரும் முகவரியும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2015ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் கருப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள முகவர் நிலையங்களின் எண்ணிக்கையும் அவற்றின் பெயர்களும் யாவை என்பதையும்;

(iv) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களை ஒழுங்குறுத்துவதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் பின்பற்றப்படும் வழிமுறை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், என்?

3.

2515/2026

கௌரவ தேவானந்த சுரவீர,— கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'சிறு வணிக அபிவிருத்திக் கடன் திட்டத்தின்' கீழ் 2025ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பயனாளிகளைத் தெரிவு செய்யும் செயன்முறையை மேற்கொள்ளும் நிறுவனம் யாதென்பதையும்;

(iii) வங்கிக் கடன்களைப் பெற்று சிறு வணிகங்களை ஆரம்பித்து நடத்திவந்த நிலையில், 'கொவிட்-19' மற்றும் 'தித்வா' போன்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக வணிக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட வணிகர்களை மீளக் கட்டியெழுப்புவதற்காக இத்திட்டத்தின் கீழ் கடன் உதவி வழங்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் பயனாளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) தகுதியானவர்களைப் புறக்கணித்து, தகுதியற்றவர்களுக்குக் கடன்கள் வழங்கப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இதுவரை கடன்களைப் பெற்றுள்ள பயனாளிகளான சிறு வணிக நிறுவனங்களின் ஊடாக வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வருமான அதிகரிப்பு தொடர்பில் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அம்மதிப்பீட்டு முறையியல் யாதென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் இக்கடன் திட்டத்தை மேம்படுத்துவதற்காக வட்டி வீதங்கள், பிணைகள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் கொள்கை ரீதியான மாற்றங்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், அம்மாற்றங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

2517/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் உத்தியோகபூர்வ இல்ல வசதிகள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iii) இன்றேல், உத்தியோகபூர்வ இல்லங்கள் இல்லாத பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ இல்லங்கள் அற்ற பொலிஸ் நிலையங்களுக்காக உத்தியோகபூர்வ இல்லங்களை அமைப்பதற்கு அல்லது வழங்குவதற்காக மதிப்பிடப்பட்டுள்ள செலவு யாதென்பதையும்;

(ii) இன்றளவில் நிர்மாணிக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அவ்வாறு நிர்மாணிக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்கள் யாவை;

(iv) பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களின் உழைப்பினைப் பெற்று உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைக்கப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) உத்தியோகபூர்வ இல்லங்கள் இல்லாததால், தனியார் வீடுகள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கென வருடாந்தம் செலவிடப்படும் தொகை யாது என்பதையும்;

(iii) தேவையான உத்தியோகபூர்வ இல்ல வசதிகளை முழுமையாக வழங்குவதற்காக முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா;

(iv) அவ்வாறாயின், அதனை நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் கால எல்லை யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5. 2565/2026

கௌரவ டப்ளியூ. எச்.எம். தர்மசேன,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளடங்குகின்ற நீதிமன்ற வலயங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்நீதிமன்ற வலயங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மடுல்ல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கல்கமுவ, நெல்லியத்த, முல்லேகம மற்றும் இங்கினியாகல ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளடங்குகின்ற நீதிமன்ற வலயங்கள் யாவையென்பதையும்;

(iv) அந்நீதிமன்ற வலயங்கள் உத்தியோகபூர்வமாக வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டிருப்பின், அவ்வர்த்தமானி அறிவித்தல் யாதென்பதையும்;

(v) அந்நீதிமன்ற வலயங்கள் இதுவரை வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்படாதிருப்பின், அது தொடர்பில் பொதுமக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் துரித நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட பன்னிரெண்டாம் நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, நவம்பர் 26).

*2.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 117 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2026 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2026 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொகையிலிருந்து ரூபா முப்பத்தொரு ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்பது மில்லியன் (ரூபா 31,849,000,000) தொகையை விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும், அத்தகைய தொகை இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

அட்டவணை

தலைப்பு	**117** -	போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு
நிகழ்ச்சித்திட்டம்	**02** -	அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
		மூலதனச் செலவினம் ரூ. 31,849,000,000
		மொத்தச் செலவினம் ரூ. 31,849,000,000

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2026 நவம்பர் 13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2026 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க.

1 தொடக்கம் 8 ஆம் இலக்கக் குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 673,674,000,000 ஆகும்.

*3.

இலங்கைக் கிரிக்கெட் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

விசர்நாய்க்கடி நோயை ஒழித்தல் மற்றும் நாய்களைப் பதிவுசெய்தல் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2026 ஒக்டோபர் 23) [1].

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கான, பாராளுமன்றத்தின் தீர்மானத்தால் நிர்ணயிக்கப்படும் ஊதியம் வழங்கப்படுவதுடன் அத்தகைய ஊதியம் 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 6(6) இன் கீழ் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிதியத்திற்குப் பொறுப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன்;

பொறியியல், சட்டம் அல்லது வணிக முகாமைத்துவத் துறையில் தகுதியும் அனுபவமும் பெற்ற ஐந்து ஆணைக்குழு உறுப்பினர்களை, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துடன் அமைச்சரால் நியமிப்பது தொடர்பான சட்டத்தின் பிரிவு 6(6) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளைப் பரிசீலித்து, ஆணைக்குழு உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புகளின் அளவை அங்கீகரித்து, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ஊதியம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைப் பின்வருமாறு வழங்குவதற்கு, 2026.09.14 ஆந் திகதிய 26/1892/804/220 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாலும்:—

ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள்	தவிசாளர்	உறுப்பினர்கள்
மாதாந்த கொடுப்பனவு	ரூபா. 200,000.00	ரூபா.100,000.00
மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு/ வாகனம்	வாகனம்	அலுவலக பணிகளில் பங்கேற்பதற்காக ஏற்படும் போக்குவரத்து மற்றும் இதர அமையச் செலவுகள்.
மாதாந்த எரிபொருள் வரையறை / லீட்டர்	150 லீட்டர்	-
மாதாந்த தொடர்பாடல் கொடுப்பனவுகள்	தொலைபேசி கட்டணத்தை மீளளிப்புச் செய்தல்	தொலைபேசி கட்டணத்தை மீளளிப்புச் செய்தல்

அதன் பிரகாரம், இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவானது, ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 6(6) ஆம் பிரிவின்படி, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிதியிலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*6.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 240 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2027 சனவரி 01 ஆம் திகதியில் தொடங்கி 2027 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக, 2024 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தின் பிரிவு 16 இற்கிணங்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான வேறு ஏதேனும் நிதியத்திலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிபின் பிரகாரம் அரசாங்கத்தால் பெறப்பட்ட ஏதேனும் கடன் தொகையிலிருந்து ரூபா இருநூற்று அறுபது பில்லியனை (ரூபா260,000,000,000) விஞ்சாத மேலதிக ஒரு தொகை செலுத்தப்பட வேண்டுமென்றும், அத்தகைய தொகையானது இங்கே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலவிடப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

அட்டவணை

தலைப்பு **240** - தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

நிகழ்ச்சித்திட்டம் **02** - அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மீண்டெழும் செலவினம்	ரூ. 10,000,000,000
மூலதனச் செலவினம்	ரூ. 250,000,000,000
மொத்தச் செலவினம்	**ரூ. 260,000,000,000**

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2026 நவம்பர் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2027 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க.

*7.

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

குடிவரவுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*15.

தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

நிதி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*17.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

18.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

இலங்கை வசதிகள் முகாமைத்துவ நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

காணி அபிவிருத்தி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

கோதாகொட குணரதன நாஹிமி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

22.

யூஎன்வீ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

"ஒதுக்கீடு" எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

2561/2026

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 'வளமான நாடு – அழகான வாழ்க்கை' கொள்கைப் பிரகடனத்தின் 120ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'நியாயமான விலையில் முட்டை மற்றும் கோழியிறைச்சியை பெற்றுக் கொள்வதற்கான விலங்குணவு உள்ளிட்ட ஏனைய உற்பத்தி மூலப்பொருட்களுக்கான வரிச் சலுகை' என்ற முன்மொழிவானது 2026.09.01ஆம் திகதியின் போது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் நிதி / பௌதீக முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?
